CSI Tamil Parish - Abu Dhabi

2000 2025 25 Years

# தூது

நற்செய்தி துணுக்குகள்

"ஈசாக்கு அந்தத் தேசத்தில் விதை விதைத்தான்; கர்த்தர் அவனை ஆசீர்வதித்ததினால் அந்த வருஷத்தில் நூறுமடங்கு பலன் அடைந்தான்."

ஆதியாகமம் 26:12

நவம்பர் - 2024 (மடல் - 24) செய்தி - 10

# பொருளடக்கம்


| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 7 |
| Children's Corner | 11 |
| வேத வினாக்கள் | 22 |
| கோதுமை மணி | 25 |
| துணுக்குகள் | 27 |
| ஆலய பக்கம் | 29 |




## *பெண் குழந்தைகள்*

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய நாமத்தில் உங்கள் யாவரையும் அன்போடு வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் பாதுகாத்து பராமரித்து வந்திருக்கிறார், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நம்முடைய குடும்பத்திற்கும் ஆசீர்வாதத்தின் மாதமாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக. இந்த மாதத்தில் நமது ***அறுப்பின் பண்டிகையை*** மகிழ்சியுடன் கொண்டாட இருக்கிறோம். ஆண்டவர் நமக்கும், நமது குடும்பத்துக்கும் செய்த ஏராளமான நன்மைகளை நினைத்து ஆண்டவருக்கு நன்றி செலுத்துகின்ற பண்டிகை. குறிப்பாக நன்றிக்கு அடையாளமாக நம்மையும், நமது காணிக்கைகளையும் அண்டவருக்கென்று அர்பணிக்கின்ற பண்டிகை. இந்தப் பண்டிகைக்காலங்கள் நமக்கு மகிழ்சியான காலங்களாக இருக்க ஆண்டவர் அருள் செய்வாராக.

இன்றைய சமுதாயத்தில் பெண்கள் இல்லாத துறையே இல்லை என்று சொல்லலாம். அறிவியல், பொருளாதாரம், ராணுவம், அரசியல், கலை, காவல் போன்ற எல்லா துறைகளிலும் பெண்கள், ஆணுக்கு இணையாக செயல்படுகிறார்கள். இப்படி எல்லாம் துறையிலும் பெண்கள் முன்னேற்றம் அடைந்து வந்தாலும் பெண் குழந்தைகளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை விட ஆண் குழந்தைகளுக்கு அதிக முக்கியத்துவத்தை நமது சமுதாயம் கொடுக்கிறது. ஆண் குழந்தைகளை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்ளும் சமுதாயம், பெண் குழந்தைகளை ஒரு சுமையாகக் கருதுகிறது.

டெல்லியில், 1991 கணக்குப்படி 1000ம் ஆண் குழந்தைகளுக்கு 904ஆக இருந்த பெண் குழந்தைகள் விகிதம் இப்பொழுது 845ஆக குறைந்துவிட்டது. காரணம் கருவிலேயே பெண் குழந்தைகள் என்றால் கலைத்து விடுவது. இது நம்து சமுதாயத்தை மேசமான நிலைக்குக் கொண்டுவந்துவிடும் என்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். பீகாரில் மட்டும் வருடத்திற்கு 1,63,200 பெண் சிசுக்கள் கொலை செய்யப்பட்டதாகப் புள்ளி விபரங்கள் சொல்கிறது. ஒருவேளை கருவறையில் காப்பாற்றப்பட்டு இந்த உலகத்தில் பிறந்தாலும் பெண்குழந்தைகள் பிறப்பு முதல் இறப்பு வரை ஆண்களையே சார்ந்திருக்க வேண்டிய கட்டாயத்துக்குள் தள்ளப்படுகிறார்கள். திருமணத்திற்கு ஏராளமான வரதட்சனை கொடுக்க முடியாமல் பெண்குழந்தைகள் அதிகப் பதிப்புக்குள்ளாக்கப் படுகிறார்கள். அதேபோன்று எல்லா இடங்களிலும் பெண்களுக்கு வேலைவாய்ப்புகள் கொடுப்பதில்லை. திருச்சபையிலும் பெண் குழந்தைகளின் பங்களிப்பு அதிகமாக இருந்தாலும், பொறுப்புகளை பகிர்ந்து கொடுப்பதற்கு நாம் தயங்குகின்றோம்.

***கடவுளின் படைப்பில் பெண் குழந்தைகள்:***

சங்கீதம் சொல்லுகிறது: ***இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம், கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.*** (சங்கீதம் 127:4) பிள்ளைகள் ஆண்டவர் கொடுக்கும் பரிசு. இதிலே ஆண் பிள்ளைகள் என்றோ, பெண் குழந்தைகள் என்றோ வேறுபாடு இல்லை. ஆண் என்றாலும், பெண் என்றாலும் குழந்தைகள் ஆண்டவர் கொடுக்கின்ற பரிசு. கடவுளே ஒரு பெற்றோருக்கு குழந்தைகளை தெரிந்தெடுத்துக் கொடுக்கிறார் என்பதினால் எந்தக் குழந்தை என்றாலும் அதை அப்படியே மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்வது மிக மிக அவசியம், ஆண் குழந்தை, பெண் குழந்தை இரண்டு பேருமே கடவுளின் சாயலில் படைக்கப்பட்டவர்கள். (ஆதியாகமம் 3:27) ஆட்சி செய்கின்ற அதிகாரத்தையும் இரண்டு பேருக்கும் சேர்த்தே ஆண்டவர் கொடுத்திருக்கிறார் (ஆதியாகமம் 1:28).

***நியாயப்பிரமாணத்தில் பாதுகாப்பு:***

இஸ்ரவேல் மக்களின் நியாயப்பிரமாணத்தில் பெண்களுக்கு ஆண்டவர் பாதுகாப்பைக் கொடுத்திருக்கிறது. ஓருவன் தன் மகளை அடிமையாக விற்றால், வாங்கியவன் அவளை அந்நியனிடம் விற்றுவிட உரிமையில்லை. இது எஜமான்களின் பாலியல் துஷ்பிரயோகம் மற்றும் பெண்களை பண்டமாக வர்த்தகம் செய்வதையும் தடைசெய்கிறது. (யாத்திராகமம் 21:7-11) அடிமை பெண் குழந்தைகளின் உடல் காயங்களிலிருந்தும் பாதுகாப்பைக்கொடுக்கிறது. (யாத்திராகமம் 21:20)

***ஆண்டவர் பயன்படுத்துகின்றார்:***

நாகமான் என்கின்ற படை தளபதியின் குஷ்டரோகம் சுகமாக்கப்படுவதற்கு இஸ்ரவேல் தேசத்திலிருந்து அடிமையாகக் கொண்டுவரப்பட்ட ஒரு சிறு பெண் காரணமாக இருக்கிறாள். இதில், சிறு பெண்ணின் ஆழமான விசுவாசம் வெளிப்படுகிறது. தான் வழிபடுகின்ற கடவுள் நிச்சயமாக சுகம் கொடுப்பார் என்கின்ற நம்பிக்கை அந்தப் பெண்ணிடம் இருந்தது. ஒரு சிறு பெண்ணை ஆண்டவர் தமது பணிக்குப் பயன்படுத்துகிறார். ***பெண் குழந்தைகள் சுமைகள் அல்ல, பாராட்டப்படுகின்ற கடவுளின் பரிசுகள். கடவுள் அவர்களை சிறப்பாகப் படைத்திருக்கிறார். குறிப்பாக குடும்பத்தைக் கட்டியெழுப்பும் சிறப்புப் பண்புகளோடு படைத்திருக்கிறார்.*** எனவே பெண்குழந்தைகளை போற்றுவோம், பாதுகாப்போம்.

**ஆண்டவர் நம்மை ஆசீவதிப்பாராக!**

*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

*கிறிஸ்துவின் பணியில்*
*தங்கள் அன்பிற்குரிய ஆயர்*
Rev. Dr. A. Samuel



கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர் நம்மையும், நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாகப் பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும், நமது குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

ஆதியாகமம் புத்தகத்தில் ஆபிரகாம், யாக்கோபு, யோசேப்பு ஆகியோருக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற இடம் ஈசாக்குக் கொடுக்கப்படவில்லை. யோசேப்பின் வரலாறு மட்டும் பத்து அதிகாரத்தில் இடம்பெற்றிருக்கிறது. ஆனால், ஈசாக்கின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்வு ஆதியாகமம் 26 ஆம் அதிகாரத்தில் மட்டுமே சொல்லப்பட்டிருக்கிறது. ஒருவேளை திருமறையில் ஈசாக்குக் குறைவான அளவில் இடம் கிடைத்திருந்தாலும், கடவுளின் மீட்பு திட்டத்தில் மிகச்சிறந்த ஒரு தந்தையின் மகன் (ஆபிரகாமின்) என்ற முறையிலும், வரலாற்று சிறப்புமிக்க இஸ்ரவேல் (யாக்கோபு) என்கின்ற மகனின் தந்தை என்பதிலும் ஈசாக்கு முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறார். திருமறையில் கடவுளின் வாக்குறுதியின் நிறைவேறுதலாகப் பிறந்த ஒரு சிலரில் ஈசாக்கும் ஒருவர். (சிம்சோன், யோவான்ஸ்நானன், இயேசு கிறிஸ்து) ஈசாக்கு ஆடுகளை மேய்ப்பதோடு மேய்ச்சலுக்காகத் தங்குமிடத்தில் நிலத்தை சாகுபடி செய்கின்றார். மழை குறைவான பாலஸ்தீன தேசத்தில் பஞ்சம் ஏற்படுவது என்பது சாதாரணமான ஒன்று. இக்கொடிய பஞ்சத்திலிருந்து புகலிடம் தேடி மக்கள் எகிப்துக்குச் செல்வது வழக்கம். ஆனால் எகிப்துக்கு செல்ல வேண்டாம் என்று ஆண்டவர் தடுப்பதோடு, (ஆதியாகமம் 26:2) ஆண்டவர் ஆபிராமுக்குக் கொடுத்த வாக்குறுதியை ஈசாக்குடன் புதிப்பித்துக்கெள்கிறார். (ஆதியாகமம் 26:3) உண்மையிலேயே ஆபிரகாமின்

ஆசிர்வாதத்தை, அவருடைய மகன் ஈசாக்குப் பெற்றுக்கொள்வதற்கு முற்றிலும் தகுதியுள்ளவன் என்பதைதான் இந்தப் பகுதி நமக்குச் சுட்டிக்காட்டுகின்றது.

### 1. கீழ்படிதலின் வழியாக ஈசாக்கு பெற்ற வெற்றி:

பொதுவாக மேய்ப்புத் தொழில் செய்கின்றவர்கள், இடம் விட்டு இடம் நகர்ந்து கொண்டே இருப்பார்கள். ஆனால் இப்பொழுது ஈசாக்கு சற்று வசதி படைத்தவன் என்பதினால் விவசாயத்தொழில் செய்கின்ற அளவுக்கு அவர் உயர்ந்திருக்கின்றார். கோராரில் குடியிருக்கிறார். ஈசாக்கு விவசாயப் பணியில் ஈடுபடுகிறார். ஆண்டவர் 100 மடங்கு பலன் கொடுக்கிறார். பஞ்ச காலம், ஆனால் ஆண்டவர் 100 மடங்கு விளைச்சலில் பலனை ஈசாக்குக் கொடுக்கிறார். காரணம் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்படிந்ததினால். பஞ்சத்திற்கு பயந்து மக்கள் எகிப்துக்கு ஓடும்பொழுது ஈசாக்கு ஆண்டவரின் வார்த்தைக்கு கீழ்படிகிறார். கேராரிலே ஈசாக்கை தங்கி இருக்க ஆண்டவர் கட்டளையிடுகிறார். ஆண்டவருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்தால் பஞ்சகாலத்தில்கூட 100 மடங்கு பலனை கொடுக்கிறார். ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்படிந்தால் ஆசீர்வாதம் உண்டு.

### 2. சோதனையில் ஈசாக்கின் வெற்றி:

உண்மை விசுவாசம் எப்பொழுதுமே சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. நூறு மடங்கு ஆசீர்வாதத்தைப் பெற்ற ஈசாக்கும் சோதனையை எதிர்கொள்கிறார். ஈசாக்கு ஐசுவரிவானாகி வரவர விருத்தியடைந்து மகா பெரியவனானான் (ஆதியாகமம் 26:13,14). அவனை சுற்றியிருக்கின்ற மக்களுக்குப் பொறாமையை ஏற்படுத்துகிறது. பொதுவாகவே ஒருவனின் வளர்சி மற்றவர்களுக்குப் பொறாமையை ஏற்படுத்துவது இயற்கை. அதிலும் பஞ்சகாலத்தில் 100 மடங்கு விளைச்சல் என்றால் நிச்சயமாக மற்றவர்களுக்கு எரிச்சலை கொடுக்கும். ஈசாக்கின் வளர்ச்சி சுற்றி இருக்கின்ற மக்களுக்குப் பொறாமையைக் கொடுத்தது. 100 மடங்கு விளைச்சல் கொடுத்த இடத்தை விட்டு ஈசாக்கை துரத்தவேண்டும் என்று நினைக்கிறார்கள். அவனுடைய கிணறுகளையும், துறவுகளையும் நிரப்பிப் போடுகிறார்கள்.

ஈசாக்கு தன் நிலத்தை விட்டு விட்டு செல்கிறார் (ஆதியாகமம் 26:17). பஞ்ச காலத்தில் 100 மடங்கு விளைவை கொடுத்த நிலத்தை விட்டு செல்வது அவ்வளவு லேசான காரியம் அல்ல. ஆனால் சோதனையில் ஈசாக்கு வெற்றி பெறுகிறார். அவருக்கு முன்பாக ஆண்டவர் கொடுத்த மிகப் பெரிய ஆசீர்வாதம் இருக்கிறது. (ஆதியாகமம் 26:3) நிச்சயமாக ஆண்டவர் தனக்குக் கொடுத்த, தமது வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவார் என்ற விசுவாசம் ஈசாக்குக்கு இருந்தது. எனவே, நூறு மடங்கு விளைவைக்கொடுத்த நிலம் அவனுக்கு பெரிதாகத் தோன்றவில்லை. உண்மை விசுவாசம் சோதனைக்கு உட்படுத்தப்படும். அந்த சோதனையில் வெற்றி பெறுவது மிகவும் அவசியம். ஆண்டவர் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்களாக நாம் வாழவேண்டும்.

### 3. சத்துருக்கள் மீது ஈசாக்கின் வெற்றி:

ஈசாக்கு புதிய கிணறுகளை வெட்டுகிறார், சில பழைய துரவுகளை சுத்தப்படுத்துகிறார். ஆனால், தொடர்ந்து சுற்றியுள்ள மக்கள் ஈசாக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டே இருக்கின்றார்கள். ஆனால் அவர்களை எதிர்த்து பிரச்சினை செய்ய ஈசாக்கு விரும்பவில்லை. சண்டை போடவோ, தனது உரிமைக்காகப் போராடவோ இல்லை. அவர் விட்டுக்கொடுக்கின்றார். அவரின் இந்தச் செயல், கர்த்தர் ஈசாக்குடன் இருக்கிறார் என்பதை சுற்றி இருக்கின்ற மக்கள் அறிந்துகொண்டு, அவரோடு நல் உறவை எற்படுத்திக் கொள்கிறார்கள் (நீதிமொழிகள் 16:7) செல்கிறது ஒருவனுடைய வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனுடைய சத்துக்களும் அவனோடே சமாதானமாகும்படி செய்வார். ஆண்டவர் நமக்குக் கொடுத்த வாக்குறுதியை நிச்சயமாக நிறைவேற்றுவார். கர்த்தர் மீது விசுவாசம் வைப்போம் ஆண்டவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வோம்.

மீட்பரின் பணியில்
**திருமதி.ஜெபா சாமுவேல்**



## சிறு தீபம்



தன் பெற்றோர் மற்றும் சகோதர சகோதரிகளோடு சந்தோஷமாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சிறுபெண், சீரியாவிலிருந்து இஸ்ரவேலுக்கு படையெடுத்து வந்த தண்டுகளுக்கு இரையானாள். சின்னஞ்சிறு சிட்டாக பறந்து வரவேண்டிய அச்சிறுமி ஒரு அடிமைப் பெண்ணாக நாகமானின் வீட்டுக்கு கொண்டுவரப்பட்டாள்.

**யார் அந்த நாகமான்?**

நாகமான் என்பவன் சீரிய ராஜாவின் படைத்தலைவன். அவன் தன் ஆண்டவனிடத்தில் பெரிய மனுஷனும் எண்ணிக்கையுள்ளவனுமாயிருந்தான்; அவனைக் கொண்டு கர்த்தர் சீரியாவுக்கு இரட்சிப்பைக் கட்டளையிட்டார்; மகா பராக்கிரமசாலியாகிய அவனோ குஷ்டரோகியாயிருந்தான் [2 ராஜா. 5:1].

**கரிசனையுள்ள அடிமைப்பெண்**



நாகமான் வீட்டிலிருந்த அடிமைப்பெண் தன் சொந்த பந்தங்களை விட்டு அடிமையாக வாழும் சூழ்நிலைக்கு வந்தாலும், தன் கர்த்தரை மறக்கவில்லை. அவளுடைய பெற்றோர் அவளுக்கு கர்த்தரைக் குறித்து போதித்திருக்க வேண்டும். எலியா தீர்க்கதரிசி மூலம் கர்த்தர் செய்யும் அதிசயங்களை அவள் அறிந்திருந்தாள். தன்னை அடிமையாகக் கொண்டு வந்த நாகமானின் மேல் எரிச்சல் கொள்ளாமல், குஷ்டரோகத்தால் பாதிக்கப்பட்டிருந்த தன் எஜமானுக்கு உதவி செய்ய எண்ணினாள் பெயர் சொல்லப்படாத அந்த அடிமைப் பெண்.

தன் எஜமானியிடம் எலிசாவைக் குறித்து கூறி, நாகமான் சமாரியாவிலிருக்கும் தீர்க்கதரிசியினடம் சென்றால் சுகம் பெறுவார் என்று கூறுகிறாள். அதன்படி நாகமான் சீரியா ராஜாவிடம் உத்தரவு பெற்று சமாரியா சென்று சுகம் பெற்றது நாம் அனைவரும் அறிந்ததே. முதலில் ஒரு படைத்தலைவனாய் எலிசாவுக்கு இணங்க மறுத்தாலும், தன்னுடன் வந்த ஊழியக்காரருக்கு கீழ்ப்படிந்து, தன் வாழ்வில் அதிசயத்தைக் கண்டான் நாகமான்.



**மாற்றங்களைக் கண்ட நாகமான்**

- ஒரு கோபக்காரனாய், பெருமையுடன் இருந்த நாகமான், தன்னைத் தாழ்த்தி, தீர்க்கதரிசியின் வார்த்தைக்கு கீழ்ப்படிந்தான்.
- தன் குஷ்டரோகத்திலிருந்து முழு சுகம் பெற்றான்.
- கர்த்தரை அறியாத நாகமான் இஸ்ரவேலிலிருக்கிற தேவனைத்தவிர பூமியெங்கும் வேறே தேவன் இல்லை என்பதை அறிந்துகொண்டான்.
- பாவம் என்னும் குஷ்டம் அவன் ஆத்துமாவை அழித்துபோடாதபடி கர்த்தரை தன் இருதயத்தில் ஏற்றுக்கொண்டான்.
- உமது அடியேன் இனிக் கர்த்தருக்கே அல்லாமல், அந்நிய தேவர்களுக்குச் சர்வாங்க தகனத்தையும் பலியையும் செலுத்துவதில்லை என்று எலியாவிடம் வாக்குக்கொடுத்தான்.

**தன் எஜமானின் வீட்டில் விளக்கேற்றிய பெண்**

மூன்று வசனங்களில் மட்டுமே கூறப்படும் அடிமைப்பெண் (2ராஜா. 5:2-4), எந்தவொரு பிரசங்கமும் செய்யாமல் தன் எஜமானை கர்த்தரிடம் கொண்டு வந்துவிட்டாள்! அவனுடைய முழு குடும்பமும் கர்த்தரிடம் வந்திருக்கும். சரியான நேரத்தில் அவள் கூறிய சரியான செய்தி அவளுடைய எஜமானின் சரீர குஷ்டத்தையும், பாவ குஷ்டத்தையும் நீக்கியது. பெண்கள், அதுவும் அடிமைப் பெண்கள் மிகவும் அற்பமாய் என்னப்பட்ட அந்தக் காலத்தில் அவள் செய்த நன்மை மிகவும் அரிய பெரிய காரியமாகும்.

**இந்த சிறு தீபத்திடம் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியது:**

- நம் வாழ்வில் ஏற்படும் தீமையான காரியங்களையும், கர்த்தரால் நன்மையாக மாற்ற முடியும்.
- நாம் எவ்வளவு சிறியவர்களாக இருந்தாலும் கர்த்தர் நம்மைப் பயன்படுத்த முடியும்.
- நம்மால் முடிந்தவரை நம்மை சூழ்ந்து இருப்பவர்களுக்கு நம்மால் முயன்ற உதவியை செய்ய வேண்டும்.

அப்பொழுது நம்முடைய தீபம் மற்றவர்களுக்கு முன் பிரகாசிக்கும். அப்போது, "***இவ்விதமாக மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக்கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது***" [மத்தேயு 5:16] என்ற வசனம் நம் வாழ்க்கையில் நிறைவேறும்.

**ஜெபசீலி ஆசீர்**



## வேதாகமப் பெண்கள்

### பிசாசு பிடித்த தன் மகளுக்காக விண்ணப்பித்த தாய்

### “சீரோபேனிக்கேயா தேசத்து ஸ்திரீ”

### [மாற்கு 7:24-30, மத்தேயு 15:21-28]

சீரோபேனிக்கேயா நாடு என்பது கலிலேயாவுக்கு அடுத்த பிரதேசம். இயேசு கலிலேயா பகுதியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அதற்கு அருகாமையில் உள்ளது தான் தீரு, சீதோன் பட்டணம். அங்கும் ஆண்டவருடைய செயல் பிரஸ்தாபமானது. அப்பொழுது சீரோபேனிக்கேயா தேசத்தாளாகிய ஒரு கிரேக்க ஸ்திரீ இயேசுவைக் குறித்து கேள்விப்பட்டு அவர் பாதத்தில் விழுந்தாள். அவள் இஸ்ரவேல் தேசத்தாள் அல்ல. ஆனாலும் இயேசுவின் மேல் அதிக நம்பிக்கை கொண்டவள். இயேசுகிறிஸ்து குழந்தைகளை நேசிக்கிறவர். அவரால் தன் மகளைப் பிடித்திருந்த பிசாசிலிருந்து விடுதலைக் கொடுக்க முடியும் என்று நம்பினவளாய் தனக்கு இரங்கும்படி வேண்டினாள்.

தாயின் பாசத்தை இயேசு கண்டார். தன் பிள்ளைக்காக அவள் தன்னை தாழ்த்தி அவர் பாதத்தில் விழுந்ததைக் கண்டார். இயேசு அவளிடம், ”முந்தி பிள்ளைகள் திருப்தியடையட்டும், பிள்ளைகளின் அப்பத்தை எடுத்து நாய்க்குட்டிகளுக்கு போடுகிறது நல்லதல்ல” என்று விசுவாசத்தை சோதிப்பதற்காக கூறினார். அவள் தன்னை அந்த நாய்க்குட்டியின் நிலைமைக்கு தயங்காமல் தாழ்த்தினாள். சாப்பிடும்போது பிள்ளைகள் சிந்துகிற துணிக்கைகளை மேஜையின் கீழிருக்கும் நாய்குட்டிகள் தின்னுமே. அந்த துணிக்கைகள் தனக்கும், தன் மகளுக்கும் போதுமானது என்று விசுவாச அறிக்கையிட்டாள். இயேசு அவள் விசுவாசத்தைக் கண்டு, “ஸ்திரீயே உன் விசுவாசம் பெரிது. நீ சொன்ன வார்த்தையினிமித்தம் போகலாம். பிசாசு உன் மகளைவிட்டு நீங்கிப்போயிற்று” என்றார். அந்நேரமே அவள் விடுதலை பெற்றாள். தாய், வீட்டிற்கு வந்தபோது மகள் விடுதலைப் பெற்று கட்டிலில் படுத்திருக்கிறதைக் கண்டாள்.

மேஜையிலிருந்து விழும் சிறு துணிக்கைக் கூட போதும் என்றவளுக்கு அவள் கேட்ட எல்லா ஆசீர்வாதமும் கிடைத்தது. ஜீவ அப்பமாகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து அவருடைய பாதத்தில் வரும்போது நம் பிள்ளைகளுக்குரிய எல்லா ஆசீர்வாதங்களையும் தர அவர் சித்தம் கொண்டிருக்கிறார்.

கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கும் பிள்ளைகள் அவருடைய ஈவு. நாம் மாத்திரம் அவர்களுக்காக ஜெபிக்க முடியும். விசேஷமாக பெண் பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். பிள்ளைகள் வளர்ந்து குடும்பத்திலும், சபைகளிலும், சமுதாயத்திலும், ஆவிக்குரிய கனிகளைக் கொடுக்க வருங்காலங்களில் ஜெபிக்கிற தாயாக மாற நாம் ஜெபிப்போம். தளர்ந்த கைகளை திடப்படுத்துவோம். தள்ளாடுகிற முழங்கால்களை பலப்படுத்துவோம். சீரோபேனிக்கேயா ஸ்திரீயின் ஜெபம் குறுகினதாய் இருந்தாலும் உள்ளத்தின் ஆழத்திலிருந்து வந்தது. கருத்தான, விடாப்பிடியான, போராடி மேற்கொண்ட ஜெபம்.

நாமும் கூட நம்முடைய பிள்ளைகளுக்காக கருத்துடனும், விசுவாசத்துடனும், சோர்ந்து போகாமல், நம்பிக்கையோடு, விடாப்பிடியாக போராடி ஜெபிப்போம். நம் தேவன் நிச்சயமாக நமக்கு பதிலளிப்பார்!

**ஷர்மிளா ராஜேஷ்**




Dear Children,

The theme this November is "**FEMALE CHILDREN**".



Did you know that there are several states in India where girls are still struggling for their rights to nutrition, education, life, and job opportunities?


In commemoration of girls' rights, and the special challenges that girls face in countries across the world, the United Nations General Assembly established October 11th as the International Day of the Girl Child. In India, it is celebrated on 24th January every year.




**WHY GIRLS' RIGHTS ?** Because being a girl should not determine what you can do, where you can go, or who you might become.



Interestingly, Christian girls in india are significantly less likely to be stunted as compared to similarly aged non-Christian girls. A study showed that elementary and higher education schools, as well as hospitals, pharmacies and print shops associated with the advent of Christianity, improved the relative human capital of women with subsequent long-term implications for young Christian girls in India today. [Menon and McQueeney (2020), Christianity and Girl Child Health In India, World Development,Vol. 136]




## THE BIBLE SAYS...

"Behold, children are a heritage from the LORD, the fruit of the womb a reward" (Psalm 127:3). - The Female child is a blessing from God!

Children ought to be loved and protected and nurtured – esp. the Female child.

God chose us (parents) to guide, admonish and protect them from the enemy by consistently reminding them of their Identity and Value in Christ, in order to affirm their Infinite, Eternal place in His Eyes.

## MAJOR BIBLE EVENT # 10 - COMMISSION




After his resurrection from the dead, Jesus spent forty days with his disciples and others.

Before ascending to heaven, he gave the apostles important instructions on announcing the gospel to all people and making them followers of Jesus.

This is referred to as "the Great Commission." Matthew 28:19-20.

The word Gospel means "Good News." Jesus's words have the power to save people from their sins.

Many Christians go to share the "Good News" in other countries. They are called missionaries.

## CHILDREN IN THE BIBLE # 10

## MARY, MOTHER OF JESUS



While the Bible does not tell us specifically how old Mary was, we can rightly deduce she was a young lady when she gave birth to Jesus.


During this time in history, Jewish girls would have been betrothed (engaged) to their husbands as early as the age of 12 years old. Scholars believe Mary would have been somewhere between 12-16 years old when she had Jesus. Mary was an important factor in God's plan to save humanity.

**Daily Application** – Despite her youth, Mary showed a great sense of faith and maturity. Rather than viewing this responsibility as a burden, Mary saw carrying the Lord as a great privilege and honor. She chose to be **brave, bold, and trust in the Lord.**

Teenagers today are preoccupied with social media, trends, and celebrities. Mary was focused on the Lord and serving Him with all her heart. God chose a young girl child to fulfil His grand purposes.

## SAYING IT WITH PICTURES...

**ARCHER** A Joyful 'toon by Mike Waters




Sons are a heritage from the LORD, children a reward from him. Like arrows in the hands of a warrior are sons born in one's youth. Blessed is the man whose quiver is full of them.
— Psalm 127:3-5 NIV


**COUNT YOUR BLESSINGS** A Joyful 'toon by Mike Waters





Praise the LORD, O my soul, and forget not all his benefits–
– Psalm 103:2 NIV

## TINY TOTS SECTION


### COMPLETE AND COLOR IN...




# FEMALE CHILDREN ARE A JOY IN THE FAMILY…




**Just like Esther, we can do great things for God!**



## MARY BRINGS BABY JESUS TO THE TEMPLE







**Children, both boys and girls can share the Good News about Jesus to others...**

# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION - FEMALE CHILDREN IN THE BIBLE

1. Who is known for saving her brother Moses from being killed by Pharaoh?

a. Miriam b. Zipporah
c. Leah d. Deborah

2. What role did Queen Esther play in the preservation of her people?

a. She led an army. b. She led the worship.
c. She built a temple. d. She spoke to the King.

3. Who was the mother of Jesus?

a. Martha b. Mary
c. Magdalene d. Mariam

4. Which girl was raised in the temple and became a prophetess?

a. Hannah b. Shiphrah
c. Anna d. Dorcas

5. Who was known for her unwavering loyalty to her mother-in-law Naomi?

a. Esther b. Ruth
c. Mary d. Rahab

6. What was the name of Job's daughters, known for their beauty and wisdom?

a. Jemimah, Kezia, and Keren-Happuch. b. Rachel, Leah, and Rebekah.
c. Ruth, Naomi, and Esther. d. Mary, Martha, and Lydia

7. Who was the young maid in Naaman's story?

a. She was Naaman's wife. b. She was a prophetess.
c. She was the king's daughter. d. She was a captured servant.

8. What does Proverbs 22:6 instruct regarding the upbringing of a child?

a. "Raise your child to follow the wise." b. "Teach your daughter."
c. "Train… in the way he should go." d. "Children are a gift."

9. Which Bible verse states that "children are a heritage from the Lord"?

a. Psalm 127:3 b. Proverbs 20:7
c. Isaiah 54:13 d. Matthew 5:8

10. Which woman is known for her good works and charitable deeds? (Acts 9 :36)

a. Lydia b. Priscilla
c. Dorcas d. Phoebe


11. Who was the first witness to the empty tomb, and encounter the risen Christ?

a. Mary Magdalene b. Mary, Mother of Jesus
c. Martha d. Joanna

12. How many books of the Bible are named after women?

a. 1 b. 2 c. 3 d. 4




**[1st Corinthians 12:27]**

____________________

____________________

____________________

____________________

## FOOD FOR THOUGHT… SHE LET GOD PUT THE LETTER TOGETHER

A farmer found a little girl who was lost in his meadow. The farmer said to her, "Do not cry; I'll take you home."



The little child snuggled up to him, and with a smile, said, "I knew you would; I was waiting for you."

"Waiting for me?" said the man. "What made you think I was coming?" "I was praying you would." she said.

"Praying? When I first heard you, you were saying A B C D E F G. What was that for?"

She looked up again and said, "I'm just a little girl. I was praying all the letters of the alphabet and letting God put them together the way He wanted to. He knew I was lost, and He knew how to put them together better than I did."

**Dear Children** - God knows what ingredients we need in our lives and how to put them together. We would be very wise to trust Him.

Source: The Faith That Moves Mountains, Lee Roberson



Bible Pathway Adventures


### MOTHERS IN THE BIBLE

Mother and Child Match

Read the scriptures below.
Put the correct letter next to the mother.

1. _____ Eve
2. _____ Sarah
3. _____ Rebekah
4. _____ Zipporah
5. _____ Ruth
6. _____ Bathsheba
7. _____ Naomi
8. _____ Hannah
9. _____ Elizabeth
10. ____ Mary
11. ____ Eunice
12. ____ Salome

A. Solomon (2 Sam 12:24)
B. Mahlon & Chilion (Ruth 1:2)
C. Samuel (1 Sam 1:20)
D. John the Baptist (Luke 1:57)
E. Isaac (Gen 17:19)
F. Timothy (2 Tim 1)
G. Obed (Ruth 4: 16-17)
H. Abel (Gen 4: 1-2)
I. Yeshua (Mat 1:16)
J. Gershom (Ex 2: 21-22)
K. Jacob (Gen 25:28)
L. James and John




## MARIAM SAVES BABY MOSES' LIFE


### SPOT 8 Differences in the below pictures





## WE ARE FORTUNATE TO BE BORN IN GOOD CHRISTIAN FAMILIES... LET THE HOLY SPIRIT ENABLE US TO WEAR THE ARMOR OF GOD IN OUR DAILY LIVES.

This girl drew the armor of God that she learned about in the scriptures (see Ephesians 6:11).
Can you find the hidden objects? (Hint: some of them are in the drawing.)



## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of November is: ________________________________
2. ________________ is celebrated as the International day of the Girl Child.
3. In India the National day of the girl child is celebrated on _____________________
4. Psalms 127:3 says - ____________________________________________________

   ____________________________________________________________________

5. ________________________________ share the "Good News" of Jesus to others
6. Mary chose to _____________________________________________________.

Children let us pray daily for the many less fortunate female children who live around us. Let us praise God daily for His blessings in our lives and strive to make a difference for the Lord!

God bless,
Briliya Jeyaseelan

# Answers to October Children's Corner

## CHOOSE THE CORRECT OPTION – THE WISDOM OF THE ELDERLY

1. b. It is a crown of glory.
2. d. Proverbs
3. b. Honor them.
4. d. Solomon
5. b. To seek their counsel.
6. b. Wisdom is with the aged.
7. c. To mentor the younger generation
8. d. They still bear fruit in old age.
9. c. Wisdom
10. a. Beginning of wisdom.
11. d. Pure, peace-loving, considerate.
12. a. Timothy.

## Hope You Enjoyed All the Activities. Complete the Short Review Below...

1. The theme for the month of October is: **THE WISDOM OF THE ELDERLY**.
2. Why is Jesus' Death and Resurrection so important?

   **Jesus took the punishment that we deserve for our sins by dying on the cross, and because he was resurrected, he has the authority over our sins and the ability to save us from the penalty for sin!**
3. What can we learn from the example of Timothy?

   **Timothy's life is a wonderful example of a child who learned from God's Word and grew up to be strong and faithful.**
4. James 1:5 says - **If any of you lacks wisdom, he should ask God, who gives generously to all without finding fault, and it will be given to him.**

***Note : Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***



# வேத வினாக்கள்

## வேதாகமம் முழுவதும்

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

### பொருத்துக:

| | |
|---|---|
| 1. ஆர்லோத் | - மீகா |
| 2. அப்பெல்லே | - யோய்தா |
| 3. எபூசியன் | - கிபியா |
| 4. ஆகிலா | - பெனாயா |
| 5. நோபில் | - ஏசேக்கு |
| 6. யாகாசியேல் | - ஆசாரியன் |
| 7. கூஷ் | - செப்பனியா |
| 8. மெலதீயா | - கிபியோனியன் |
| 9. நியாயம் | - தண்ணீர் |
| 10.யூதாவின் தலைவன் | - செருபாபேல் |
| 11. கேராரூர் | - மலைக்காடு |
| 12. மொரேசா | - மேடு |
| 13.பெனாயா | - உத்தமன் |
| 14.அபியா | - ஆசாரியர்களின் பட்டணம் |
| 15.பெலதியா | - அர்வனா |

# அக்டோபர் மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் வேதாகமம் முழுவதும் |
|---|---|---|
| 1 | ஞானம் | பிரசங்கி 7:19 |
| 2 | கர்த்தர் | ஏசாயா 38:8 |
| 3 | வாசஸ்தலத்தை | யாத்திராகமம் 26:1 |
| 4 | யோபு | யோபு 19:1,3 |
| 5 | ஆபிரகாமின் ஊழியக்காரன் | ஆதியாகமம் 24:2,10 |
| 6 | ஜாடி | எசேக்கியேல் 45:14 |
| 7 | ஆசா | 2 நாளா. 14:1 |
| 8 | யாக்கோபின் மேலும் யோவானின் மேலும் | மாற்கு 10:41 |
| 9 | நானாவிதத் திராட்சரசம் | நெகேமியா 5:18 |
| 10 | தாவீது | 1சாமு. 25:5 |
| 11 | சுத்தமானவர்கள் | லூக்கா 17:17 |
| 12 | இரண்டு | உபாகமம் 4:11 |
| 13 | தானியேல், அனனியா, மீஷாவேல், அசரியா | தானியேல் 1:11,12 |
| 14 | அப்சலோம் | 2 சாமுவேல் 18:15 |
| 15 | செபுலோனியனாகிய ஏலோன் | நியாயாதிபதிகள் 12:11 |




*குறிப்பு : அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.*

## செப்டம்பர் மாத வேத வினாக்களுக்கு பதில் அளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Helen Sharmila Ray
9. Mrs.Jebaseeli Asir
10. Mrs. Jenila Gannraj.L
11. Mrs.Jasmine Sobha
12. Mr. Jeba Jino
13. Mrs.Kishi Maher
14. Mrs.Manuel Sarah
15. Mrs.Nandhini Rajkumar
16. Mrs .Priya Ranjith Kumar
17. Mr. Prawin Durai Sam
18. Mrs.Praveena Arun
19. Mr.Salin Robert
20. Mrs.Sheeba Merlin
21. Mrs.Sheeba Herlin
22. Mrs. Subija Jino
23. Mrs . Sharmila Rajesh
24. Mrs.Subi Kishore
25. Mr.Selva Shaji




## Children who answered September – 2024 Quiz

1. Aaran
2. Aadhav Steve Matthew
3. Adelyn Victoria Jeyaseelan
4. Camryn Robert.S
5. Clement Dave
6. Danion Lemuel
7. Daniel Vanya (RUWAIS)
8. Evelyn Gracia
9. Evelyn Loria V
10. Galvin Robert.S
11. Gabrilyn Hannah
12. Giana Elin
13. Hadriel Adventier
14. Jevlyn Ana
15. Jerilyn Pushpam Nelson
16. Johan Sam Manuel
17. Joha Anit Manuel
18. Jeya Jehosheba Maher
19. Jeya Joshua Maher
20. Jen Scudd
21. Jim Scott
22. Johanan Paul Jino
23. Joanna Paul Jino
24. Jaylan paul Jino
25. Joshuva koshy
26. Jaslin shanna
27. Jebasheba .M
28. Janey Titus
29. Joel Abrakam
30. Jarick Aaron
31. Kev Shannen.P.S
32. Liana Erin
33. Leona Juliet
34. Rivqah Deby Rajkumar
35. Steffi Priscilla .R
36. Starlyne Noble
37. Sam Jesvin Vincent
38. Yedidiah Arun  (Ruwais)
39. Yovaan jairus (Ruwais)





## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்

***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***

***14-06-1912 – 20-01-1997***

### இந்தியா முழுவதும் VBS

1989-ல் வியாராவிலுள்ள பெத்தேல் சிறுவர் இல்லத்தில் குஜராத் முதல் VBS நடத்தப்பட்டது. இதில் 212 சிறுவர் பங்கேற்றனர். சகோதரிகள் திலகா, வால்டா மற்றும் ஷரிவா ஆகிய மூன்று VBS ஊழியரும் குஜராத்தி மொழியை வெகுவேகமாக கற்றுக் கொண்டனர்.

1991-ம் ஆண்டு பெரேயா VBS பாடப்புத்தகங்களைத் தங்கள் தாய்மொழியில் பெற்ற குஜராத் சிறுவர் அகமகிழ்ந்தனர். 1992-ம் ஆண்டு குஜராத்திலும் இயக்குநர் பாசறை நடத்தப்பட்டது. ஏறக்குறைய 400 பேர் இதில் பயிற்றுவிக்கப்பட்டனர். இந்த பயிற்சி குஜராத்தி, மராட்டி மற்றும் ஹிந்தி ஆகிய மூன்று மொழிகளில் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது. குஜராத் VBS-ன் மணம் அண்டை மாநிலமான ராஜஸ்தானையும் எட்டவே அங்கும் VBS-க்கு வரவேற்பு கிடைத்தது. எனவே குஜராத்தின் வடபகுதியில் உள்ள சபர்கண்டா மாவட்டத்திலுள்ள லுசடியா என்ற இடத்தை மையமாகக் கொண்டு ராஜஸ்தான் கிளை இயங்கி வருகிறது. CNI அத்தியாட்சாதீன ஆதரவு, இந்த குஜராத், ராஜஸ்தான் ஊழியங்களுக்குப் பெரும் பாக்கியம்.

பல சுவிசேஷ இயக்கங்களின் மிஷினரிப் பணித்தளங்களிலும், கமித், ருக்னா, சௌத்ரி, வசவா, பீல், வார்லி முதலிய இனங்களைச் சேர்ந்த ஆதிவாசி மக்கள் வாழும் காடு மலைகளுக்கிடையே உள்ள கிராமங்களில் VBS மூலமாக வேதபாடங்களும், பாடல்கள், ஊழியர் சரிதைகள், சத்தியம் சொல்லும் கதைகள், பொம்மலாட்டம், குறு நாடகங்கள் மூலமாக அறிவிக்கப் படுகின்றது. சுவிசேஷமும், சிறுவர்களோடு குடும்பத்தின் பெரியவர்களையும் சிந்திக்க வைக்கின்றது. 2004-ல் குஜராத், ராஜஸ்தான், மகாராஷ்டிரா தவிர பீஹாரிலும் அவரவர் தாய்மொழியில் VBS வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

அந்தந்தப் பகுதியில் வாழும் விசுவாசிகளின் உதவியோடு குஜாராத்தி, மராட்டி, ஹிந்தி, ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. பெரேயா VBS-ன் பாடத்திட்டங்களோடு, பிற மாநிலத்தில் வாழும் தமிழ் குழந்தைகளுக்குத் தமிழ் வழிமுறை VBS வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றனர். VBS பாடல்கள் தமிழ், குஜாரத்தி, மராட்டி, ஹிந்தி மொழிகளில் ஒலிப்பதிவு செய்யப்பட்டு விநியோகிக்கப் படுகின்றன. கோடை விடுமுறை மற்றும் குறிப்பிட்ட விடுமுறை நாட்களில் மட்டுமே நடத்தப்பட்டு வந்த VBS தவிர ஒவ்வொரு ஞாயிறும் நடக்கும் ஓய்வுநாள் பள்ளிக்கான இரண்டு ஆண்டு பாடத்திட்டமும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளதால் ஆதிவாசி கிராமங்களிலும் ஓய்வுநாள் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. இவைகளில் சில மலையிடுக்குகளிலும், காட்டுப் பகுதிகளிலும் நடத்தப்படுவதால் அறிவியல் முன்னேற்றமுள்ள 21-ம் நூற்றாண்டிலும் படங்கள், மற்றும் இதர சாதனங்களடங்கிய பெட்டிகளைக் கையிலோ, முதுகிலோ தூக்கி நடக்க வேண்டியுள்ளது. சில நேரங்களில் இந்த VBS ஊழியர்கள் தங்கள் சாமான்களைத் தலையில் வைத்துக் கொண்டு ஓடும் சிறு நதிகளைக் கடந்து சென்று பணி செய்கின்றனர்.

இந்த இரு VBS நிறுவனங்களும் 70 ஆண்டுகளை முடித்து முன்னேறிக் கொண்டிருக்கின்றன. ஆரம்பகால VBS ஆசிரியர்களில் ஒருவரும் திருச்சபை வளர்ச்சி ஊழியத்தின் ஸ்தாபகருமான அருள்திரு. போஸ் மெய்யப்பன் அவர்கள் தனது விவிலியப் படிப்பின் நிறைவுக்கான பாடத்திட்ட ஆராய்ச்சியை VBS ஊழியங்களின் வளர்ச்சியைப் பற்றியே செய்தார். FMPB, IEM, Vishwavani, IMS, NMS, NSM, SISU, World Vision போன்ற இயக்கங்களின் பணித்தளங்களிலும் ECI, AG, CSI, CNI சபைகளுக்குள் அடங்கும் ஆலயங்கள், கல்வி நிலையங்களிலும் இவ்விரு VBS-களும் தங்கள் ஊழியத்தை தொடர்கின்றன. இன்று பெரெயா, பெங்களூர் VBS தவிர இன்னும் பல VBS வகுப்புகளும் அறிமுகமாகி வருகின்றன.

அமெரிக்கப் பெண்மணிகளான சகோதரி ஈடித், திருமதி ஹாமில்ட்டன், இவர்களின் மாணவனும், சந்தியா சாமுவேல் மற்றும் சின்ன அண்ணாச்சி என்று பாசமாய் நினைவு கூறப்படும் பி.சாமுவேலும் இந்திய மண்ணில், அதுவும் கோவில்பட்டியில் ஆரம்பித்த VBS மூலம் கோடிக்கணக்கான சிறுவர்கள் தேவனை சிறுபிராயத்தில் சொந்த இரட்சகராக ஏற்று எஞ்சிய வாழ்க்கையைச் சமாதானமாய் வாழ்ந்து சுகிக்கின்றனர்.

சின்ன அண்ணாச்சி பி.சாமுவேலின் சீடரும், கர்த்தருக்குள் செல்லப் பிள்ளைகளுமான Rev. Dr. Babu Immanuel Venkatraman, Rev.Tennyson M.Peter, இவர்கள் இருவரும் பங்காரபெட் பெங்களூர் VBS-ல் பணி செய்தனர்.

சிறுவயதில் கர்த்தரை ருசித்து, இளமையை இயேசுவுக்கே அர்ப்பணித்து, முதிர்வயதுவரை கனிதந்த ஈடித் பெர்ல் மார்கனை திருநெல்வேலி மாவட்டமும், நெல்லைத் திருமண்டலமும் மட்டுமல்ல, நம் தேசமும் நன்றியோடும், பெருமிதத்தோடும் நினைவு கூறும்.

- **முற்றும்**



## பாடல் பிறந்த கதை

### பாமாலை 235 – தனி மாந்தன், தேசத்தாரும்
### (Once to every man and nation)



1. தனி மாந்தன் தேசத்தாரும்,
நீதிப் போரில் சேர்ந்துமே
நன்மை நாட்ட தீமை ஒய்க்க
ஓர் தருணம் நேருமே;
ஸ்வாமி ஆட்சி, மேசியாவை
ஏற்று அன்றேல் தள்ளியே
தீமை நன்மை ஒன்றைத் தேர்ந்து
ஆயுள்காலம் ஓடுமே.

*'யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்'. யோசுவா 24:15*

ஆபிரகாமின் காலமுதல் அவன் சந்ததியாரைக் கடவுள் பராமரித்து, அவர்களுக்குப் பெரிய காரியங்களைச் செய்து, மோசே, யோசுவா முதலிய சிறந்த தலைவர்கள் மூலம் அவர்களை எகிப்து நாட்டிலிருந்து பாலைவனத்தின் வழியாக நாற்பது ஆண்டுகளாக வழிநடத்திக் கடைசியில் கானான் நாட்டில் குடியேறச் செய்தார். ஆயினும் காலாகாலங்களில் இஸ்ரவேல் புத்திரர் எகோவாவை மறந்து, அந்நிய தேவர்களைச் சேவித்தனர். அவர்களுக்கு அடிக்கடி எச்சரிப்புகள் கொடுக்கப் பட்டிருந்தும், அவர்களில் பலர் அந்நிய தேவர்களையே சேவித்துக் கொண்டிருந்தனர். ஆகையால் யோசுவா இஸ்ரவேலரின் எல்லாக் கோத்திரத்தாரையும் சீகேமிலே கூடிவரச் செய்து, (யோசுவா 24:1) கடவுள் இதுகாரும் அவர்களுக்குச் செய்த எல்லா நன்மைகளையும் அவர்களுக்குக் காட்டின எல்லா இரக்கங்களையும் விவரித்துச் சொல்லி 'யாரை சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்' எனக் கூறினார்.

மானிட வாழ்க்கையில், எதைத் தெரிந்து கொள்ளுவோம் என்று தீர்மானிக்கும் ஒரு சந்தர்ப்பம் எல்லா மனிதருக்கும் ஏற்படுவது நிச்சயம். உண்மையையா பொய்யையா; நீதியையா அநீதியையா; தாழ்மையையா மேட்டிமையையா – எதைத் தெரிந்து கொள்ளலாம் என அடிக்கடித் தீர்மானிக்க வேண்டிவருகிறது. இதைப் போலவே, உலகத்திலுள்ள ஒவ்வொரு நாட்டுக்கும் அரசியல் காரியங்களில் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் செய்யவேண்டிய சந்தர்ப்பம் ஏற்படுகிறது. யுத்தமா சமாதானமா; பிறநாட்டுப் பகுதிகளை ஆக்ரமிப்பதா அல்லது தனக்குள்ள பகுதிகளில் திருப்தியாயிருப்பதா, முதலிய பல பிரச்சனைகள் ஏற்படும்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளின் வரலாற்றில் பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் இப்படிப்பட்ட பல பிரச்சனைகள் ஏற்பட்டன. 1845ம் ஆண்டில் அமெரிக்கச் சட்டசபையில், அருகிலிருந்த மெக்ஸிகோ நாட்டுடன் போர் தொடுக்க வேண்டுமென ஒரு தீர்மானம் விவாதிக்கப் பட்டது. இது அடிமைகள் வைத்திருந்த தென்பகுதியினர் தங்கள் பகுதியை விரிவாக்கும் நோக்கத்தோடு கொண்டுவரப் பட்டது. இத்தீர்மானத்தை அச்சமயம் சட்டசபை அங்கத்தினராயிருந்த ஆபிரகாம் லிங்கன் கடுமையாக எதிர்த்தார். மேலும், அடிமைகள் வைக்கலாமா கூடாதா என்ற பிரச்சனையும், அடிமைகள் வைத்திருந்த தென் பகுதியினர் தனி நாடாகப் பிரிந்துவிட வேண்டும் என்ற

அபிப்பிராயமும் அமெரிக்க மக்களை வெகுவாகக் கலங்க வைத்தது. அச்சமயத்தில் அந்நாட்டிலிருந்த ஜேம்ஸ் லோயல் என்னும் கவிஞர் (James Russell Lowell) நாட்டில் உண்மையும், நீதியும், நேர்மையுமே மேலானவை என்பதை மக்களுக்கும், அரசியல்வாதிகளுக்கும் புகட்டுமாறு 1845ல், 90 வரிகளைக் கொண்ட ஒரு செய்யுள் எழுதினார். இதில் எவ்விதக் கஷ்டமும் நஷ்டமும் வந்தாலும், நீதியும் உண்மையுமே மேலானது என்று சுட்டிக்காட்டினார். இச்செய்யுளின் முப்பத்திரண்டு வரிகள் மட்டும் நான்கு கவிகளுள்ள ஒரு பாடலாகத் தொகுக்கப்பட்டிருக்கிறது. இப்பாடலே, ‘தனிமாந்தன், தேசத்தாரும்’ என்னும் பாடலாகும். இப்பாடலுக்கு ‘Ton-y-botel’ என்னும் ராகம் அமைக்கப்பட்டது. இது வேல்ஸ் நாட்டின் கடற்கரையில் ஒதுங்கிய ஒரு கண்ணாடிப் புட்டியுனுள் எழுதிவைக்கப்பட்டிருந்த ராகம் எனக் கூறப்படுகிறது. ஆதலால் அதற்கு ‘Ton-y-botel’ (புட்டியுலுள்ள ராகம்) எனப் பெயர் வந்தது (*இந்தப்பதிவில் கொடுக்கப்பட்டிருக்கும் ராகம் அல்ல. இப்பதிவில் “hyfrydol” எனும் ராகம் கொடுக்கப்பட்டிருகிறது*).

இப்பாடலை எழுதிய ஜேம்ஸ் ரஸ்ஸல் லோயல் என்பவர் 1819ம் ஆண்டு, பிப்ரவரி மாதம், 22ம் தேதி, அமெரிக்காவில் மாசாசூசட்ஸ் மாகாணத்தில் கேம்ப்ரிட்ஜ் நகரில் பிறந்தார். 1838ல் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் பயின்று பட்டம் பெற்றார். அவர் ஒரு வழக்கறிஞராக வேண்டுமென்று அவரது பெற்றோர் விரும்பியதால், அவர் சட்டப்படிப்பும் முடித்து, 1840ல் வழக்கறிஞராகப் பயிற்சி ஆரம்பித்தார். இவ்வேலையை அவர் திறமையுடன் செய்ய இயலாததால், சில காலத்துக்குப்பின் அதை விட்டு இலக்கியத்துறையில் புகுந்து, அநேக செய்யுள்களும், கட்டுரைகளும் எழுதிப் பத்திரிகைகளில் வெளியிட்டார். 1855ல் அவர் பல உபந்நியாசங்கள் செய்ததால், ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் நவீனமொழி மேற்பார்வையாளராக அமர்த்தப்பட்டார். 1877 முதல் 1880 வரை ஸ்பெயின் நாட்டில் அமெரிக்க ஸ்தானாதிபதியாகவும், 1880 முதல் 1885 வரை இங்கிலாந்தில் ஸ்தானாதிபதியாகவும் பணியாற்றினார். அவரது இலக்கியத் திறமையைப் பாராட்டி ஹார்வர்ட், ஆக்ஸ்ஃபோர்ட், கேம்ப்ரிட்ஜ், எடின்பெரோ பல்கலைக்கழகங்களில் அவருக்குக் கௌரவப் பண்டிதர் பட்டம் அளிக்கப்பட்டது.

ஜேம்ஸ் லோயல் 1891ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 12ம் தேதி மறுமைக்குட்பட்டார்.

.



**டிசம்பர் மாத தலைப்பு**

**சாஸ்திரிகள்**

***Wise Men***



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் – நவம்பர் 2024

| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள் |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | 6.30 pm – 7.30 pm | Junior Church |
| | | 8.00 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 3 | ஞாயிறு | 11.00pm – 1.00 pm | உபவாச ஜெபம் – *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| | | 2.00 pm – 3.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - *Cocoa Lounge, ADCP Tower, 17th Floor, Electra* |
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 8 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | சிறுவர் ஆராதனை – St.Andrew's church |
| 10 | ஞாயிறு | 5.30 pm – 6.30pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 15 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை - St.Andrew's church |
| 17 | ஞாயிறு | 6.30 pm – 7.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் |
| 19 | செவ்வாய் | 7.00 pm – 8.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 22 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 29 | வெள்ளி | 6.30 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய ஆராதனை - St.Andrew's church |
| 30 | சனி | 11.45 pm – 12.00 am | மாத இறுதி ஜெபம் – ஆயர் இல்லம் |

# BIBLE READING FOR CHILDREN – NOVEMBER 2024




| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.11.24 | Galatians | 5 : 1 - 5 |
| 2.11.24 | Galatians | 5 : 6 - 10 |
| 3.11.24 | Galatians | 5 : 11 - 15 |
| 4.11.24 | Galatians | 5 : 16 - 20 |
| 5.11.24 | Galatians | 5 : 21 - 26 |
| 6.11.24 | Galatians | 6 : 1 - 6 |
| 7.11.24 | Galatians | 6 : 7 - 12 |
| 8.11.24 | Galatians | 6 : 13 - 18 |
| 9.11.24 | Ephesians | 1 : 1 - 6 |
| 10.11.24 | Ephesians | 1 : 7 - 12 |
| 11.11.24 | Ephesians | 1 : 13 - 17 |
| 12.11.24 | Ephesians | 1 : 18 - 23 |
| 13.11.24 | Ephesians | 2 : 1 - 7 |
| 14.11.24 | Ephesians | 2 : 8 - 12 |
| 15.11.24 | Ephesians | 2 : 13 - 17 |
| 16.11.24 | Ephesians | 2 : 18 - 22 |
| 17.11.24 | Ephesians | 3 : 1 - 5 |
| 18.11.24 | Ephesians | 3 : 6 - 11 |
| 19.11.24 | Ephesians | 3 : 12 -17 |
| 20.11.24 | Ephesians | 3 : 18 - 21 |
| 21.11.24 | Ephesians | 4 : 1 - 7 |
| 22.11.24 | Ephesians | 4 : 8 - 13 |
| 23.11.24 | Ephesians | 4 : 14 - 20 |
| 24.11.24 | Ephesians | 4 : 21 - 26 |
| 25.11.24 | Ephesians | 4 : 27 - 32 |
| 26.11.24 | Ephesians | 5 : 1 - 6 |
| 27.11.24 | Ephesians | 5 : 7 - 13 |
| 28.11.24 | Ephesians | 5 : 14 - 20 |
| 29.11.24 | Ephesians | 5 : 21 - 27 |
| 30.11.24 | **Ephesians** | 5 : 28 - 33 |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் – நவம்பர் 2024



| தேதி | நாள் | காலை | | மாலை | |
|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | 1 நாளாகமம் | 17 : 1 - 14 | லூக்கா | 16 : 1 - 14 |
| 2 | சனி | 1 நாளாகமம் | 17 : 15 - 27 | லூக்கா | 16 : 15 - 32 |
| 3 | ஞாயிறு | 1 நாளாகமம் | 18 : 1 - 17 | லூக்கா | 17 : 1 - 16 |
| 4 | திங்கள் | 1 நாளாகமம் | 19 : 1 - 19 | லூக்கா | 17 : 17 - 37 |
| 5 | செவ்வாய் | 1 நாளாகமம் | 20 : 1 - 8 | லூக்கா | 18 : 1 - 17 |
| 6 | புதன் | 1 நாளாகமம் | 21 : 1 - 16 | லூக்கா | 18 : 18 - 43 |
| 7 | வியாழன் | 1 நாளாகமம் | 21 : 17 - 30 | லூக்கா | 19 : 1 - 16 |
| 8 | வெள்ளி | 1 நாளாகமம் | 22 : 1 - 19 | லூக்கா | 19 : 17 - 31 |
| 9 | சனி | 1 நாளாகமம் | 23 : 1 - 15 | லூக்கா | 19 : 32 - 48 |
| 10 | ஞாயிறு | 1 நாளாகமம் | 23 : 16 - 32 | லூக்கா | 20 : 1 - 16 |
| 11 | திங்கள் | 1 நாளாகமம் | 24 : 1 - 15 | லூக்கா | 20 : 17 - 33 |
| 12 | செவ்வாய் | 1 நாளாகமம் | 24 : 16 - 31 | லூக்கா | 20 : 34 - 47 |
| 13 | புதன் | 1 நாளாகமம் | 25 : 1 - 15 | லூக்கா | 21 : 1 - 20 |
| 14 | வியாழன் | 1 நாளாகமம் | 25 : 16 - 31 | லூக்கா | 21 : 21 - 38 |
| 15 | வெள்ளி | 1 நாளாகமம் | 26 : 1 - 16 | லூக்கா | 22 : 1 - 18 |
| 16 | சனி | 1 நாளாகமம் | 26 : 17 - 32 | லூக்கா | 22 : 19 - 34 |
| 17 | ஞாயிறு | 1 நாளாகமம் | 27 : 1 -15 | லூக்கா | 22 : 35 - 51 |
| 18 | திங்கள் | 1 நாளாகமம் | 27 : 16 - 34 | லூக்கா | 22 : 52 - 71 |
| 19 | செவ்வாய் | 1 நாளாகமம் | 28 : 1 - 10 | லூக்கா | 23 : 1 - 16 |
| 20 | புதன் | 1 நாளாகமம் | 28 : 11 - 21 | லூக்கா | 23 : 17 - 31 |
| 21 | வியாழன் | 1 நாளாகமம் | 29 : 1 - 17 | லூக்கா | 23 : 32 - 56 |
| 22 | வெள்ளி | 1 நாளாகமம் | 29 : 18 - 30 | லூக்கா | 24 : 1 - 18 |
| 23 | சனி | 2 நாளாகமம் | 1 : 1 - 17 | லூக்கா | 24 : 19 - 36 |
| 24 | ஞாயிறு | 2 நாளாகமம் | 2 : 1 - 18 | லூக்கா | 24 : 37 - 53 |
| 25 | திங்கள் | 2 நாளாகமம் | 3 : 1 - 17 | யோவான் | 1 : 1 - 21 |
| 26 | செவ்வாய் | 2 நாளாகமம் | 4 : 1 - 22 | யோவான் | 1 : 22 - 38 |
| 27 | புதன் | 2 நாளாகமம் | 5 : 1 - 14 | யோவான் | 1 : 39 - 51 |
| 28 | வியாழன் | 2 நாளாகமம் | 6 : 1 - 17 | யோவான் | 2 : 1 - 10 |
| 29 | வெள்ளி | 2 நாளாகமம் | 6 : 1 - 18 | யோவான் | 2 : 11 - 25 |
| 30 | **சனி** | **2 நாளாகமம்** | 6 : 32 - 42 | **யோவான்** | 3 : 1 - 16 |

## ஆராதனை பாடல்கள் – நவம்பர் 2024



| | |
|---|---|
| **01-11-24** | |
| பாமாலை - 253 | கர்த்தாவே, யுகயுகமாய் |
| பாமாலை – 166 | வான ஜோதியாய் இலங்கி |
| கீர்த்தனை – 98 & 99 | ஆவியை மழைபோலே யூற்றும்<br>ஆவியை அருளுமே சுவாமி |
| பாமாலை - 37 | ஞான நாதா, வானம் பூமி |
| **08-11-24** | |
| பாமாலை - 237 | இயேசு எங்கள் மேய்ப்பர் |
| பாமாலை – 239 | இயேசு கற்பித்தார் ஒளி வீசுவே |
| கீர்த்தனை – 70 & 77 | ஆத்துமே என் முழு உள்ளமே<br>சீர் ஏசு நாதனுக்கு ஜெய மங்களம் |
| முடிவு கீதம் | பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும் |
| **15-11-24** | |
| பாமாலை - 386 | சர்வத்தையும் அன்பாய் |
| பாமாலை - 243 | நேர்த்தியான தனைத்தும் |
| கீர்த்தனை – 230 | சத்திய வேதமான விதை காலை<br>ஆண்டவர் பங்காக அனைத்தையும் |
| கீர்த்தனை – 5 | சருவ லோகாதிபா நமஸ்காரம் |
| **22-11-24** | |
| பாமாலை – 19 | எவ்வண்ணமாக கர்த்தரே |
| பாமாலை - 295 | அருள் மாரி எங்குமாக |
| கீர்த்தனை – 185 & 333 | இயேசு நேசிக்கிறார்<br>எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே |
| கீர்த்தனை – 173 | வாரும் ஐயா போதகரே |
| **29-11-24** | |
| பாமாலை – 5 | எல்லாம் சிஷ்டித்த நமது |
| பாமாலை – 48 | கர்த்தருக்கு ஸ்தோத்திரம் |
| கீர்த்தனை – 69 & 19 | என்ன என் ஆனந்தம்<br>பாடித் துதி மனமே பரனைக் |
| கீர்த்தனை – 33 | இந்நாள் வரைக்கும் கர்த்தரே |

## திருமறை பாட ஒழுங்குகள் – நவம்பர் 2024

| தேதி | தியானப்பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| **01-11-24** | சகல பரிசுத்தவான்கள் | எரேமியா 31:31-34 | எபிரேயர் 11:32-40 | மத்தேயு 5:1-12 | - |
| **08-11-24** | திருச்சபையும் குழந்தைகளும் | யாத். 2:1-10 | 3 யோவான் 1:1-12 | மத்தேயு 18:1-10 | 121 |
| **15-11-24** | நன்றியே காணிக்கை | யாத். 25:1-9 | 2 கொரி. 9:6-15 | லூக்கா 17:11-19 | - |
| **22-11-24** | பிரகாசிக்க அழைப்பு | ஏசாயா 60:1-3, 18-22 | எபேசியர் 5:6-17 | யோவான் 8:12-19 | 27 |
| **29-11-24** | வருகையின் நற்செய்தியைக் கொண்டாடுதல் | ஏசாயா 11:1-9 | எபிரேயர் 2:1-10 | லூக்கா 1:46-49 | 146 |

## செவ்வாய் கிழமை – ஏரியா ஜெப குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேதபகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| **05-11-24** | சங்கீதம் | 145 : 1-10 | Musaffah |
| **12-11-24** | சங்கீதம் | 145 : 11-21 | TCA |
| **19-11-24** | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| **26-11-24** | சங்கீதம் | 146 | Al Wadha |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



# BIRTHDAY - NOVEMBER





| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mrs. | Manuel Sarah Foulkes Moore |
| 1 | Mr. | David Paulraj. S |
| 1 | Master. | Alden Benny Matteo |
| 1 | Mr. | Vivin Alfred |
| 1 | Mrs. | Shekin Gunavathy Jhannah |
| 1 | Mrs. | Vithya Selvi |
| 1 | Mr. | Ansel Regi |
| 4 | Mr. | Rajan Sagariya Nadar |
| 5 | Ms. | Chrysel Benny |
| 5 | Mr. | Prince Samuel |
| 5 | Master | J. D. Hebin Yakkisher |
| 5 | Mr. | Davidraja Manimaran |
| 5 | Mrs. | Lincyselena E. |
| 5 | Master | Evaniya Sherin |
| 9 | Mrs. | Jafnie Jebin |
| 9 | Mr. | Samuel Jackson Rajan |
| 12 | Ms. | Janessa. M |
| 13 | Mrs. | Shoba Denshi Bai |
| 14 | Mrs. | Neroline Jessey |
| 14 | Mr. | Arun Jeya Singh |
| 14 | Mr. | Jaya Chandraraja |
| 14 | Mrs. | Rachel John |
| 14 | Mrs. | Jenifa Jayasingh |
| 14 | Mrs. | P. Michael Rani Stalin |

# BIRTHDAY - NOVEMBER




| Birth Date | Title | Name |
|---|---|---|
| **17** | Mr. | Johanspher V |
| **17** | Baby. | Evelyn Loria. V |
| **17** | Ms. | Jerusha Raja |
| **18** | Mr. | Arun A |
| **20** | Mrs. | Deepa. C.P |
| **20** | Mrs. | Josephin C |
| **20** | Master | Brightson Timothy Raj |
| **21** | Miss | Binulin Wafiga W S |
| **23** | Mr. | Joshua Prince |
| **23** | Mr. | Immanuel Stanly |
| **23** | Miss | Dafina Dinesh |
| **24** | Mrs. Dr. | Ashibha Issac Eban |
| **25** | Mrs. | Jemima Srinivasan |
| **26** | Ms. | Joanna Irene Johnson |
| **26** | Master. | Sam Sundar |
| **27** | Ms. | Angelin Monica Arun |
| **27** | Mrs. | Sasirekha Rajan |
| **28** | Mr. | Prem Stalin Russalaian |
| **29** | Baby | K. M. Alton Kim |
| **29** | Mr. | Arulanandham Pous M |
| **30** | Mrs. | Jasling Reeba Vigil Kumar |

## WEDDING ANNIVERSARY – NOVEMBER




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| **8** | Dr. & Mrs. | Benny Samuel. S |
| **11** | Mr. & Mrs. | Wilfred Sumad San K |
| **15** | Mr. & Mrs. | Gnanaraj Murugesan |
| **18** | Mr. & Mrs. | Danial Abraham |
| **21** | Mr. & Mrs. | Nithiya Kirubakaran. T |
| **24** | Mr. & Mrs. | Allen Joshua V |
| **30** | Mr. & Mrs. | Vijay Ananth D |
| **30** | Mr. & Mrs. | John Michael Franklin E. |

## புதிய அங்கத்தினர்களின் சேர்க்கை விவரம்




| S.No. | Name | Mem. No. |
|---|---|---|
| 1 | Mr. Edwin | 494 |















Church Day & Choir Day

CSI Tamil Parish Abu Dhabi







Madinat Zayed Church Day & Harvest Festival


Bless the Lord
O My Soul
And forget not
all His benefits
PSALM 103:2-3


Give Thanks